# உழவன் உரிமை

அக்டோபர் 2011, விலை: 6



# தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்திற்கு புதிய வேளாண் தொழில் நுட்ப பயிற்சி முகாம்



அண்ணாமலைப் பல்கலைக்காக உழவியல் துறையின் கீழ் உலக வங்கியின் பங்களிப்புடன் செயல்பட்டு வரும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு விவசாயி சங்க பிரதிநிதிகள் விவசாயிகளுக்கு புதிய வேளாண் தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது.

கடலூர் நாகை மற்றும் விழுப்புரம் போன்ற மூன்று மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களிடம் செயல்படுத்தப் படும் இத்திட்டத்தின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் நோக்கில் இப்பயிற்சி திட்டமிடப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் 75 பேர் கலந்து கொண்ட பயிற்சி முகாமில் உழவியல் துறை பேராசிரியர் மற்றும் துறை தலைவர் முனைவர் ஆர்.எம். கதிரேசன் வரவேற்று பேசினார். பின்னர் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட குறுந்தகடு விவசாயிகளுக்கு விவசாய பயிற்சி மையத்தில் வைத்து திரையிடப்பட்டது. வயல் மானாவாரி மற்றும்தோட்ட கலை நிலங்களில் செயல் படுத்தப் படும் புதிய வேளாண்மை தொழில் நுட்பங்களை விவசாய சங்க பிரதிநிதிகள் பார்வையிட்டனர் பின்னர் விவசாயிகள் உழவியல் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட கண்காட்சியையும் பார்வையிட்டார்கள்.

மதிய உணவுஇடைவேளைக்கு பின் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் படும் விரிவாக்க கிராமங்களை தேர்வு செய்யப்பட்ட சாத்தமங்கலம் மற்றும் சாக்காங்குடி ஆகிய கிராமங்களுக்கு நேரடி அனுபவம் பெற அழைத்து செல்லப் பட்டனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் நேரடியாகவே பயனாளிகளை சந்தித்து இப்புதுமை திட்டத்தின் செயல்பாடுகளை எளிதாக தெரிந்து கொண்டனர் பின்னர் மீண்டும் உழவியல் துறைக்கு வந்து திட் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க பணியாளர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியை அண்ணாமலை பல்கலைக் கழக வேளாண் விரிவாக்கத் துறை உதவி பேராசிரியர் முனைவர் தி.ராஜ்பிரவின் வாழ்த்துரை வழங்கி தொகுத்து வழங்கினார்.

இக்கலந்துரையாடல் நிகழ்ச்சியில் விவசாய சங்க பிரதிநிதிகளின் கேள்விகளுக்கு சந்தேகங்களுக்கு பேராசிரியர் கதிரேசன் தலைமையிலான குழு விளக்கம் அளித்தது பின்னர்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் திட்டகுழு உறுப்பினர்களுக்கு பொன் ஆடை வழங்கியும் உழவன் உரிமை பவள விழா மலர் வழங்கியும் சிறப்பு செய்யப்பட்டது. இறுதியில் தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் நன்றி தெரிவிக்க பயிற்சி முகாம் இனிதே பெற்றது.

---

## வாசகர்களுக்கும் முகவர்களுக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

- ஆசிரியர் குழு





# 21ம் நூற்றாண்டிலும் ஒளிராத இந்தியா

தமிழகத்தில் 115 கிராமங்களில் மின்வசதி இல்லை நத்தம் விஸ்வநாதன் தமிழக மின்துறை அமைச்சர்

200க்கும் மேற்பட்ட கிராமங்களில் மின்சாரம் இல்லை மின்வாரியம் தமிழ்நாடு

இந்தியாவில் 15 ஆயிரம் கிராமங்களிலும், 65 லட்சம் வீடுகளிலும் மின் இணைப்பு கிடைக்காத தால்,இருளில் மூழ்கியுள்ளன. தமிழகத்தில் 150 கிராமங்களில் மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

அனைத்து கிராமங்கள், நகரங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்க மத்திய அரசு

திட்டமிட்டுள்ளது. இதற்காக, ராஜீவ் கிராமப்புற மின்வசதி இல்லாத கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்கு மின் வசதி தரப்படுகிறது.

இத்தட்டத்தில், இந்தியா முழுவதும் மின் வசதி ஏற்படுத்த வேண்டிய கிராமங்கள் மற்றும் வீடுகள் குறித்த பட்டியலை, ஒவ்வொரு மாநில மின்துறைக்கு, மத்திய மின்துறை அனுப்பி வருகிறது. இதன்படி, தமிழகத்தில் அனைத்து வீடுகள் மற்றும் கிராமங்களில் மின்வசதி உள்ளதாக பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மதுரை, தேனி,திருவண்ணாமலை, ஈரோடு,கோவை உள்ளிட்ட மாவட்டங்களில், 115 குக்கிராமங்களில், மின்வசதி இல்லையென, தமிழக சட்டசபையில் கூறப்பட்டுள்ளது. இந்த கிராமங்களில், விலைவில் மின்வசதி ஏற்படுத்தப்படும் என, மின் துறை அமைச்சர் விஸ்வநாதன் கூறியுள்ளார். உண்மையில், தமிழகம் முழுவதும் நீலகிரி, திருநெல்வேலி, திண்டுக்கல், தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களிலும் சேர்த்து, 200க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மின்வசதி இல்லையென, தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கான காரணம் குறித்து,எரிசக்தித்துறை உயரதிகாரி கூறியதாவது.

குக்கிராமங்கள், மலைவாழ் பகுதிகளில் மின் வசதி செய்யும் பணிகளை, தமிழக எரிசக்தி மேம்பாட்டு முகமை(டெடா) மேற்கொள்கிறது. மின்வாரிய சப்ளை கொடுக்க,அந்த பகுதி வழியே மின் கம்பி, மின்கடத்தி பாதைகள் இருக்க வேண்டும் பெரும்பாலான குக்கிராமங்கள், மலைவாழ் பகுதிகளில், இந்த வசதிகள் இல்லாததால், மின் வாரியத்தால் சப்ளை தர முடியாது.

ஆனால், மத்திய அரசின் உதவியுடன் தமிழக எரிசக்தி மேம்பாட்டு முகமையின் சார்பில், மின்வசதி ஏற்படுத்தப்படும். சூரிய மின்சக்தி, சிறியவகை நீர் மின் நிலையம், காஸ் மின் உற்பத்தி நிலையங்களை குக்கிராமங்கள் மற்றும் மலைவாழ் பகுதிகளில் அமைத்து, மின் சப்ளை தரப்படும். விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் இயற்கை சூழலை கருத்தில்கொண்டு, பல கிராமங்களில் மின் சப்ளை செய்ய வனத்துறை அனுமதிப்பதில்லை.

இந்திய கிராமப்புற மின்மயமாக்கல் நிறுவனம் வெளியிட்ட பட்டியலின்படி, இந்தியா முழுவதும் 15 ஆயிரம் கிராமங்களிலும், 64.79 லட்சம் வீடுகளிலும், மின் இணைப்புகள் கொடுக்கப்படாமல் உள்ளன. இந்தியா சுதந்திரம் அடைந்து 64 ஆண்டுகள் முடிந்த நிலையிலும், மின்வசதி இல்லாத ஆயிரக்கணக்கான கிராமங்கல் இருளில் மூழ்கியுள்ளன.

இந்தியாவில் பாஜக ஆட்சி முடிந்து 2004ல் பார்லிமென்ட் தேர்தல் வந்தபோது, இந்தியா ஒளிர்கிறது என்ற கோஷத்தை எழுப்பியது. இந்த கோஷம் எழும்பி ஏழு ஆண்டுகள் ஆன நிலையிலும், கிராமப்புற வளர்ச்சியை தனது லட்சியமாக அறிவித்த நேரு மற்றும் ராஜிவின் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும் நிலையிலும், மின் வசதியின்றி, இந்தியா ஒளிராமல் இருப்பதுதான் ஆச்சர்யமான வேதனையைத் தருகிறது.

## அரசுத் துறைகளின் அலட்சியம் காரணம்

**தமிழக எரிசக்தி மேம்பாட்டு முகமை, குக்கிராமங்கள் மற்றும் மலைவாழ் பகுதிகளில் மின் இணைப்பு தர, அதிக சிரத்தை எடுப்பதில்லை. இதற்கு, மத்திய அரசின் நிதி கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.**

**எரிசக்தி மேம்பாட்டு முகமை, கிராமப்புற மின்மயமாக்கல் திட்டத்தையும், ராஜீவ் கிராமப்புற மின்வசதி திட்டத்தையும், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் வனத்துறையுடன் இணைந்து செயல்படுத்துகிறது. இதில், மற்ற துறைகளிலிருந்து சரியான ஒத்துழைப்பு கிடைக்காததால், பல கிராமங்கள் மின்வசதி செய்யப்படாமல் உள்ளது.**